(தமிழ்ப் பேச்சு - பிரிவு 4)

# மாணிக்கவாசக சுவாமிகள்

மாணிக்கவாசகர் அந்தணர் குலத்தில் திருவாதவூரில் அவதரித்தார். அதனால் அவருக்கு வாதவூரர் என்ற பெயரும் உண்டு. சகல கலைகளில் சிறப்புப் பெற்று அரிமர்த்தன பாண்டியனுக்கு முதல் அமைச்சராகப் பணி ஆற்றினார். 'தென்னவன் பிரமராயன்' என்னும் சிறப்புப் பட்டத்தையும் பாண்டியன் அவருக்கு வழங்கினான்.

வாதவூரர் எந்நேரமும் சிவ சிந்தனையில் திளைத்து, ஒரு குருவை அடைய ஏங்கித் தவித்தார். "குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை" என்பது பழமொழி.

அரசன் அளப்பரிய பொன் கொடுத்துக் குதிரைகள் வாங்க வாசகரை அனுப்பினான். போகும் வழியில் திருப்பெருந்துறையில் சிவன், குரு உருவத்தில் காட்சி கொடுத்தார். அவரிடம் திருவடி தீட்சை பெற்றுக் கடவுள், உயிர், உலகம் ஆகிய முப்பொருள்களின் உண்மையை உணர்ந்தார்.

இறையருள் பெருகி, அதனால் நாவன்மை அருளப் பெற்று, மணியான சொற்களில் அருட்பாடல்கள் பொழிந்தார். இதனால் மகிழ்வுற்ற குரு ரூபத்தில் வந்த சிவன், அவருக்கு 'மாணிக்கவாசகர்' என்ற நாமத்தைச் சூடினார்.

இறைப் பேரின்பத்தில் மூழ்கி, வாசகர் துறவுக்கோலம் பூண்டு குரு சேவைக்குத் தன்னை அர்ப்பணித்தார். இதனால் அரசரின் சினத்துக்கு தண்டனைக்கும் உள்ளாகினார்.

இதைத் தொடர்ந்து சிவ அருள் பாலித்து, பரியை நரியாக்கிய படலமும், மதுரையில் வெள்ள அணை கட்ட செம்மனச் செல்விக்கு உதவப் பிட்டுக்கு மண் சுமந்து, அனைவரும் பிரம்படி வாங்கிய படலமும் யாவரும் அறிந்ததே.

வாசகரின் வாழ்க்கை ஞான நிட்டையிலும், ஞான நெறியிலும், திருவருட்பாக்கள் பாடுவதிலும், இறைவனைத் தேடுவதிலும் கழிந்தது.

மக்களுக்கு வீட்டு நெறியைச் சிவபுராணம், திருவெம்பாவை மூலமும் அருளிச் செய்தார். மனமுருகும் திருவாசகத்தை அருளிச் செய்தார்.

அடிகளாரின் வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழ்ந்தது. பிற சமயத்தாரை நாவன்மையில் வென்றார். பிறவியிலேயே ஊமையாகிய பெண்ணைப் பேச வைத்தார்.

இதைவிட எல்லாம் வல்ல சிவனே அந்தண ரூபத்தில் வந்து அவரது திருவாசகத்தையும், திருக்கோவையையும் வாசகர் பாட, ஓலையிலே எழுதி, உலகுக்கு அருளிச் செய்தார்.

ஏட்டின் முடிவிலே "வாதவூரன் விளம்பிட, அம்பலவன் எழுதியது" என்று வரையப்பட்டு, "அழகிய சிற்றம்பலமுடையான்" என்று ஒப்பமிட்டும் இருந்தது. இதை அறிந்த மூவாயிரம் தில்லைவாழ் அந்தணர்கள் அடிகளிடம் சென்று, "நீர் பாடிய பாடல்களுக்கு பொருள் யாது?" என்று வினாவ, "பொருளைக் காட்டுகிறேன் வாருங்கள்" என்று கூறி, தில்லைச்சிவனின் கோயிலில் எழுந்தருளி உள்ள சிவனைக் காட்டி, "இவரே அந்தப் பொருள்" என்று காட்டியதோடு, கோயில் திருவறையில் புகுந்து, எல்லோரும் காண இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

மாணிக்க வாசக அடிகளின் வாழ்க்கை வரலாறு, எல்லாம் வல்ல சிவனானவன் "அடியார்க்கு அடியானாக" அருள்புரியும் சிவ தத்துவத்தையும், குரு - சிஷ்ய உறவின் மகத்துவத்தையும், குருவருளினால் திருவருள் பெற்றதையும் எடுத்துக்காட்டுகிறது. இதைவிடத், தியானத்தின் மூலம் மானிடர் பேரின்ப நிலை அடைவதும், இறை அருள் பெருகினால் மானிடர் முக்தி மார்க்கத்தை எய்தும் தத்துவத்தையும் சித்தரிக்கிறது.

நன்றி!
வணக்கம்!